2013 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆற்காடு சார்–பதிவாளர் அலுவலகம் 1908 ஆம் ஆண்டு முதல் அரசுக் கட்டடத்தில்தான் இயங்கி வருகிறது. இக்கட்டடம் கட்டப்பட்டு சுமார் 104 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. நூறு ஆண்டுகள் பழமைவாய்ந்த அரசுக் கட்டடங்கள், பழுதடைந்த அரசுக் கட்டடங்கள் மற்றும் தனியார் கட்டடங்களில் இயங்கி வரும் 52 சார்–பதிவாளர் அலுவலகங்கள் ஒவ்வொன்றிற்கும் தலா ரூபாய் 50 இலட்சம் வீதம் ரூபாய் 26 கோடி செலவில் அரசுக் கட்டடம் கட்டுவதற்கு நிருவாக அனுமதியும், நிதி ஒப்பளிப்பும் வழங்கி, அரசாணை (நிலை) எண் 57, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 12–4–2012ன் படி, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி கட்டப்பட உள்ள, நூறு ஆண்டுகள் பழமைவாய்ந்த அலுவலகங்களில் அரக்கோணம் பதிவு மாவட்டம், ஆற்காடு சார்–பதிவாளர் அலுவலகமும் ஒன்றாகும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன் அவர்கள், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 117, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

117—

போக்குவரத்துப் பணிமனை

***4611—திரு. டி. சுரேஷ்குமார்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதியில் போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் கோட்டம், திருவண்ணாமலை மண்டலம், செங்கம் பணிமனை தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. போக்குவரத்துக் கழகத்திற்கான சொந்தமாக பணிமனை அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு, செங்கம் தாலுகா, துவக்கவாடி கிராமத்திற்கு உட்பட்ட சர்வே எண் 54/1-ல் உள்ள 4 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, போக்குவரத்துக் கழகத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர், முதன்மைச் செயலாளர், நில நிருவாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்துள்ளார். நில உரிமை மாற்றம் செய்த பின், செங்கத்தில் பணிமனை அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார் அவர்கள்.*

திரு. டி. சுரேஷ்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்கு டெப்போ அமைத்திட கேட்ட உடனேயே அனுமதி கொடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதியின் சார்பாகவும், என் சார்பாகவும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 118, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

118—

தகவல் தொழில்நுட்பப் பூங்கா

***17297—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—